மவுண்ட் றூயிட் தமிழ்க் கல்வி நிலையம்
Mount Druitt Tamil Study Centre
Mobile: 0413 229 638 | Email :mtdruitttsc@gmail.com | Web : www.mtsc.org.au




பேச்சுப் போட்டி 2024

# ஆண்டு 4

பேச்சுப் போட்டி குறிப்பின் ஒலி வடிவத்திற்கு இந்த விரைவு எதிர்வினைக் குறியீட்டை வருடுக :

(குறிப்பு : இது ஒரு வழிகாட்டல் மட்டுமே. மாணவர்கள் தங்களது சொந்த வசன நடையில் இதனை பயின்று மேடையில் பேசுவதற்கு பெற்றோர்கள் ஊக்கப்படுத்தவும்)

அனைவருக்கும் அன்பான வணக்கம் .......

## சுற்றுலாப்பயணங்கள்

நாம் தினமும் வேலை, படிப்பு, சமையல், சாப்பாடு என ஓடிக்கொண்டே இருக்கிறோம். மீதிநேரத்தை கணினியில் அல்லது திறன்பேசியில் தொலைத்து விடுகிறோம்.

எமது உடலுக்கும் மனதுக்கும் ஓய்வு எடுக்கிறோமா? குடும்பத்தினருடன் நேரம் செலவிடுகிறோமா?
இல்லை.... அங்கேதான் சுற்றுலாப்பயணங்கள் உதவுகின்றன

**சுற்றுலாப்பயணம் என்றால் என்ன?**
சிலநாட்கள், வேறு இடங்களுக்குச் சென்று, அங்கேயே தங்கியிருந்து, புதிய அனுபவங்களைப் பெறுவதாகும். அத்துடன் உறவினர்களையும் நண்பர்களையும் கண்டு மகிழலாம். அவ்விடத்தின் கலாசாரம், பாரம்பரியம், உணவுகள் பற்றி தெரிந்து கொள்ளலாம்.

சுற்றுலாக்கள் விட்டுக்கொடுக்கும் பழக்கத்தையும், புரிந்துணர்வையும் வளர்க்க உதவும்.
மேலும், இயற்கையின் அழகை ரசிக்கலாம்!
விநோதங்களைக் கண்டு வியக்கலாம்!
சுற்றுலாக்கள் எப்போதும் புத்துணர்ச்சியையும் மகிழ்ச்சியையும் அள்ளித்தருவன!

நன்றி, வணக்கம்!




ஆக்கம்: ஆசிரியர் திருமதி. விஜயசுதா குகனேஸ்வரன்.
ஆசிரியர் திருமதி. ஜனனி டேவிட் மதன்ராஜ்.